முருகப்பெருமான் துணை

**மகான் நொண்டிச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.03.2024**, செவ்வாய்க்கிழமை

1. கலியின் கொடுமை வென்றிட
கருணை வடிவாக வேலவனும்
அழியாமை வரம் மக்கள்பெற
ஆறுமுக அரங்கனாக அவதாரம்
2. அவதாரம் கொண்டு வழிநடத்த
அன்னதனின் சூட்சுமம் கூறி
அவனியில் சோபகிருது சால்திங்கள்
அறிவிப்பேன் இருபான்நவ திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 29ம் நாள், 12.03.2024, செவ்வாய்க்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசிதனை
வல்லமைபட நொண்டிச்சித்தர் யானும்
பாரதம் வளம்பெற உரைப்பேன்
பண்பானவர்களும் ஆளுமை புரியவே
4. ஆளுமை புரியவே ஞானிகளும்
அறிவுத் தெளிவு ஊட்டும்படி
வலுவான ஞானசபை நிறுவி
வள்ளலாக அரங்கமகா ஞானியும்
5. ஞானியும் வழிகாட்டி வர
நம்பியே ஞான சபைக்குள்
ஞானிகளை வணங்கி வர
ஞானபலம் வரமாகக்கிட்டி
6. கிட்டியே அவரவர்க்கு உள்ளும்
குறிப்பாக அவரவர் வந்தநல்
திட்டம் நோக்கம் தெளிவுகண்டு
தேறவே குருவருள் வேண்டுமெனும்
7. வேண்டுமெனும் பக்குவம் கிட்டி
விடாது அரங்கன் தருமவழியில்
தொண்டனாகித் தொண்டு செய்து
தொடர்ந்து வந்து அரங்கன் ஏற்கும்

8. ஏற்கும் சீடர்களாகி ஞானவழி
இணையிலா தேற்றம் கண்டும்
அற்புதம் படைக்கும் சன்மார்க்க
அரங்கன் ஆன்மீக அரசியல்களம்

9. களம்தனில் அறிவுத் தெளிவுபட
கட்டமைப்பில் இணைந்து நன்கு
வலம் வருவார் ஞானவான்களாக
வல்லமை கூடியே வருமுலகில்

10. வருமுலகில் அரங்கன் வழிநடத்த
வல்லமைபட போட்டியிட்டு
தருமஞான ஆட்சி முறைக்கு
தகுதி பெற்றவர்களாகத் தேறி

11. தேறியே ஆறுமுகனார் துணைபட
தெய்வ பலமிக்க ஞானஆட்சியை
அறிவுத் திடமுற அரங்கன் சீடர்களே
அகிலமெங்கிலும் படைப்பர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–